கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

O.S.No. 96/2021 தேதி: 27.09.2022

2022 ஆண்டு செப்டம்பர் திங்கள் 27-ம் நாள் வாதி சாட்சி - 2 ன் பிரமாண வாக்குமூலம்.

1969 ஆண்டு 14வது சட்டத்தின் படி 12-வது பிரிவின் கீழ் திரு.K.கமலநாதன், பி.எஸ்சி., பி.எல்., கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.மணிகண்டன் |
| தந்தை/கணவர் பெயா | : | வைத்தியலிங்கம் |
| வயது | : | 37 |
| தொழில் | : | விவசாயம் |
| முகவரி | : | எண். 8, ஐய்யனார் கோயில் வீதி,<br>கீழ் குமாரமங்கலம் கடலூர். |

நான் இந்த வாதி சாட்சி - 2 ஆக ஏற்புறுதி ஆவணம் தாக்கல் செய்கிறேன். அவற்றில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்லியவாறு சரியாக எழுதப்பட்டுள்ளது என்றும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் சத்தியமாய் சொல்கிறேன்.

ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதும் வரவில்லை. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி சொல்கிறேன் என்றால் நாங்கள் ஒரே ஊர் என்பதால் அவர் பயிர் செய்த விவரம் தெரியும் ஆகையால் வாதி அழைத்ததின்பேரில் சாட்சி சொல்கிறேன்.

வழக்கு சொத்தின் சர்வே எண் விஸ்தீரணம் சக்குபந்தி தெரியுமா என்றால் வாதி 60 குழி பயிர் செய்கிறார். சர்வே எண், சக்குபந்தி தெரியாது. தாவா சொத்திற்கான பாசன வசதி என்ன என்றால் பம்பு செட் ஆகும். யாருடைய பம்பு செட் மூலம் தண்ணீர் பாய்கிறது என்றால் பார்த்தசாரதி நாயுடு. அந்த போர் எங்கு உள்ளது என்றால் 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தில் சுற்றி வைக்கப்பட்டுள்ள போஸ்ட்க்கு நடுவில் 3 மோட்டார்கள் உள்ளன. அந்த 3 மோட்டார்களையும் பார்த்தசாரதி நாயுடு 3ம் பிரதிவாதியிடம் விற்று சென்றுவிட்டார். அந்த 3 மோட்டார்களுக்கும் 3 சர்வீஸ் உள்ளது.

அந்த 3 மோட்டார்களும் நல்ல நிலையில் உள்ளனவா என்றால் 2 மோட்டார்கள் நல்ல நிலையில் இருந்தன். தற்போது 3ம் பிரதிவாதி 3வது போர் போட்டுள்ளார். 3ம் பிரதிவாதி வாங்கிய இடத்தில் ஒரே ஒரு சர்வீஸ் மட்டும்தான் உள்ளது என்றாலும் அதில் உள்ள போர்

பழுதடைந்து உள்ளது என்றாலும் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்து எங்கு இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

நாங்கள் 3 தலைமுறையாக விவசாயம் செய்வதாலும் நாங்களும் பார்த்தசாரதி நாயுடுக்கு எதிராக வழக்கு நடத்தியதாலும் எனக்கு வழக்கு விவரம் தெரியும். பார்த்தசாரதி நாயுடுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ததற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்வோம். பார்த்தசாரதி நாயுடு யார் என்றால் இந்த வழக்கு சொத்தை பார்த்தசாரதி நாயுடுவிடமிருந்து தான் 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார்.

நாங்கள் பார்த்தசாரதி நாயுடு இடத்தில் பயிர் செய்யும் இடமும் 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய இடமும் வெவ்வேறானவை. பார்த்தசாரதியிடம் எனக்கு குத்தகை ரசீது உள்ளது. பார்த்தசாரதி நாயுடுவிடம் பயிர் செய்பவர்களுக்கு குத்தகை ரசீது கொடுக்கப்படுமா என்றால் பயிர் செய்வது பதிவாகி இருந்தால் ரசீது கொடுக்கப்படும். எங்கு பயிர் செய்யப்படும் என்றால் தாசில்தார் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படும்.

மேற்படி வாதிக்கும் குத்தகை ரசீது கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் வாதி வழக்கு தாக்கல் செய்யாததால் அவருக்கு கொடுக்கவில்லை. 3ம் பிரதிவாதி எப்போது வழக்கு சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் 2011 ஆகும். வழக்கு சொத்து சம்மந்தமாக வாதி RDO விடம் புகார் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்திடம் புகார் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

தாவா சொத்திற்கு வடக்கே கிழக்கு மேற்காக ரோடு சொல்கிறது என்றால் சரிதான். அந்த ரோட்டிலிருந்து வழக்கு சொத்து எத்தனை அடி பள்ளம் என்றால் சுமார் 2 1/2 இருக்கும். ரோட்டிலிருந்து வழக்கு சொத்து 20 அடி பள்ளம் இருக்கும் என்றால் சரியல்ல. தற்போது வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்றால் கரம்பாக உள்ளது. தற்போது யார் பயிர் செய்கிறார் என்றால் யாரும் பயிர் செய்யவில்லை.

3ம் பிரதிவாதிதான் தற்போது தாவா சொத்தில் நெல் பயிர் செய்கிறார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி சொத்துக்கு மேற்கும் தெற்கும் ஏரி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு உள்ளே வருவதற்கு 3ம் பிரதிவாதி கேட் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய பிறகு 3ம் பிரதிவாதி போர் போட்டு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி என்னிடம் அவர் வாங்கிய சொத்தை மனைப்பிரிவுகளா மாற்றி விற்க போவதாக சொல்லியுள்ளாரா என்றால் என்னிடம் சொல்லவில்லை.

தற்போது அந்த சொத்தை மனைப்பிரிவுகளா பிரிப்பதற்கு மண் ஏதும் அடிக்கவில்லை என்றாலும் ரோடு ஏதும் போடவில்லை என்றாலும் சரிதான். வழக்கு சொத்து தற்போதும் விவசாய நிலமாகதான் உள்ளது. நான் வாதிகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.